# மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்களின் நீதிமன்றம்

(மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம், 2016)

லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம், காமராஜர் சாலை, சென்னை- 60005.

**முன்னிலை: திரு. ஜானி டாம் வர்கீஸ் இ.ஆ.ப.**

---

**ந.க.எண்: 229/ச.அ.2/2020** **நாள்: 16.04.2020**

தமிழக அரசு தனது அறிவிப்பு எண். 118 இல் நாள்: 14.3.2020, அரசாணை (நிலை) எண். 95, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 13.3.2020 COVID-19 நோவல் கொரோனா வைரஸ் தமிழ்நாட்டில் அறிவிக்கப்பட்ட நோயாக அறிவிக்கப்பட்டுள்ளது. COVID-19 இன் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான பாதுகாப்பு, கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தமிழக அரசு பலப்படுத்தியுள்ளது.

தனிநபர் சுகாதாரம், சுய தனிமைப்படுத்தல் மற்றும் நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கான பிற புதுமையான நடவடிக்கைகள் குறித்து தமிழக அரசு பொதுமக்கள் மத்தியில் பல்வேறு உணர்திறன் மற்றும் விழிப்புணர்வு ஆலோசனைகளை ஊக்குவித்து வருகிறது. இந்த சூழலில், அரசு அரசாணை (நிலை) எண் 152, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல (பி1) துறை, நாள். 23.3.2020, பொது மக்கள் பாதுகாப்பில் அக்கறை கொண்டு நோய் பரவுவதை தடுக்க கடுமையான வீட்டு தனிமைப்படுத்தலைப் பின்பற்றவும் மற்றும் நோய் பரவுவதைத் தடுப்பதிலும், அத்தியாவசிய சேவைகளை அணுகுவதற்காக மட்டுமே வெளியே வருமாறும், 3 அடி சமூக இடைவெளியை கண்டிப்பாக கடைபிடிக்குமாறும் கடுமையான அறிரைகளை வழங்கியுள்ளது.

இந்த சூழலில், மாற்றுத்திறனாளிகள் அரசு நியாய விலைக் கடைகளிலிருந்து அரிசி, பருப்பு, எண்ணெய் மற்றும் பிற இலவச பொருட்களை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்

என்பது மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் கவனத்திற்கு வந்துள்ளது. ஊரடங்கின்போது அரசாங்கத்தால் வழங்கப்பட்ட சலுகைகளைப் பெற அதிக மக்கள் கூட்டம் மற்றும் நீண்ட வரிசை காரணமாக அரசால் தெரிவிக்கப்பட்டுள்ள சமூக இடைவெளியை மீற வழிவகை செய்கிறது. மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம், 2016 இன் பிரிவு 42 இல் "மாற்றுத்திறனாளிகளுக்கான பொதுவான பயன்பாட்டிற்காக அனைவருக்குமான வகையில் வடிவமைக்கப்பட்ட நுகர்வோர் பொருட்கள் மற்றும் பாகங்களின் வளர்ச்சி, உற்பத்தி மற்றும் விநியோகத்தை மேம்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது." மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 3(5), "மாற்றுத்திறனாளிகளுக்கேற்ற நியாயமான வசதியமைப்புகளை உறுதி செய்வதற்கு தகுந்த தேவையான நடவடிக்கைகளை உரிய அரசு எடுக்க வேண்டுமென வலியுறுத்துகிறது. (பிரிவு 2 (y) "நியாயமான வசதியமைப்பு" என்பது ஒரு குறிப்பிட்ட வழக்கில் ஏற்றத்தாழ்வான அல்லது தேவையற்ற சுமையை சுமத்தாமல், மாற்றுத்திறனாளிகளுக்கு மற்றவர்களுடன் சமமாக உரிமைகளை அனுபவிப்பதை அல்லது பயன்படுத்துவதை உறுதிசெய்ய தேவையான மற்றும் பொருத்தமான மாற்றங்கள் மற்றும் சரிசெய்தல் என்பதாகும். மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 25 (1), "மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்குவதற்கு பொருத்தமான அரசாங்கமும் உள்ளூர் நிர்வாகமும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும், (இ) வருகை மற்றும் சிகிச்சையில் முன்னுரிமை அளிக்க வலியுறுத்துகிறது

மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர், மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம், 2016 இன் கீழ் ஒரு சிவில் நீதிமன்றம் போல் தாக்கல் செய்யப்படும் வழக்கை விசாரிக்க அதிகாரம் உள்ளவர், மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு எதிரான பாகுபாடு மற்றும் அவர்களின் உரிமைகள் இழப்பு, இதுபோன்ற பிரச்சினைகள் மற்றும் தீர்ப்பு உத்தரவுகளைத் தீர்ப்பதற்கு அவருக்கு அதிகாரம் உள்ளது.

மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம், 2016 இன் பிரிவு 80 இல் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்படி, அந்தச் சட்டத்தின் கீழ்

மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்ட மேற்கண்ட விதிமுறைகளுக்கு இணங்க, உடனடி ஏற்பாடுகளைச் செய்வது பொருத்தமானது. மாற்றுத்திறனாளிகளுக்கு அரசாங்கத்தின் நியாய விலைக் கடைகளிலிருந்து அரிசி, பருப்பு, எண்ணெய் மற்றும் பிற பொருட்களைப் வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்க ஏதுவாக சிறப்பு ஏற்பாடாக மாற்றுத்திறனாளிகள் தனி வரிசையாகவும் மற்றும் தேவைப்படின் இவர்களின் வீட்டிற்கே பொருட்களை வழங்க பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் இவர்கள் நோய் பரவல் குறித்த பீதியிலிருந்து வெளியே வரவும், ஊரடங்கு காலத்தில் அரசு வழங்கும் சலுகைகளை எவ்வித இடையுறுமின்றி பெறவும் இயலும்.

எனவே, மாற்றுத்திறனாளிகள் உரிமைச் சட்டம், 2016 இல் குறிப்பிட்டுள்ளவாறு எந்தவொரு மாற்றுத்திறனாளியும் அவர்களின் முறையான உரிமைகளை இழக்காமல் இருக்க ஏதுவாக. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைக்கு நோட்டிஸ் அனுப்பப்பட்டுள்ளது. இதில் மாற்றுத்திறனாளிகளுக்கென தனிவரிசை ஏற்படுத்தி தருமாறும் மற்றும் தேவைப்படின் வீட்டிற்கே சென்று இலவசப் பொருட்களை வழங்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்கூறிய தகவல்களில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்கென எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் மற்றும் தற்போதயை நிலை இந்த நீதிமன்றத்திற்கு விரைவாக தெரிவிக்க கோரப்படுகிறது,

**ஒம்/-**
**ஜானி டாம் வர்கீஸ்**
**மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்**

பெறுநர்:
ஆணையர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, எழிலகம், 4வது மாடி, சேப்பாக்கம், சென்னை - 600005.
நகல்:

1. ஆணையர், நகராட்சி நிர்வாக ஆணையர், 11வது மாடி. நகராட்சி நிர்;வாக கட்டிட வளாகம், (CIBA கட்டிடம் எதிரில்) 75, சாந்தோம்

நெடுஞ்சாலை, M.R.C நகர், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை - 600028.

2. மாவட்ட ஆட்சியர்கள்., அனைத்து மாவட்டங்கள்
3. ஆணையர், அனைத்து நகராட்சிகள்
4. அரசு செயலாளர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தலைமை செயலகம், சென்னை - 600009.